மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் காஞ்சிபுரம் மேற்பார்வை ஆய்வாளரிடம் இருந்து இன்னும் புலன் விசாரணையினுடைய ரிப்போர்ட் வந்து சேரவில்லை. ஆனால் அந்தத் தொழிலாளரின் குடும்பத்தினருக்கு அதிகத் தொகை கிடைப்பது பற்றி அந்தத் தொழிற்சங்கத் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேனேஜ்மெண்டுடன் பேச்சு வார்த்தை நடத்தி எவ்வளவு அதிகமாக வாங்கிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக வாங்கிக் கொடுக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். அத்தோடு அரசு தரப்பிலேயும் அவர்கள் என்ன உதவியை எதிர்பார்க்கிறார்களோ அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை ஓட்டேரிக் கால்வாய் தூர் எடுப்புப் பணி.

*வினா எண். 796—திரு. சு. பாலன் : மாண்புமிகு வேளாண்மைத் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பி அண்டு சி மில் மத்தியில் ஓடும் ஓட்டேரி கால்வாய் மண் நிரம்பிவிட்டதால் சாதாரண மழை பெய்தாலும் சுற்றிலும் உள்ள பகுதிகளிலும் மழை நீர் தேங்கி வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க அதில் தூர் வாரி இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

ஆம். ஓட்டேரி நல்லாவை அதன் தலைவாயிலிலிருந்து கடைசி வரை சீரமைக்க ரூ. 12·30 இலட்ச ரூபாய் மதிப்பீடு கொண்ட திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வேலை நடைபெற்று வருகிறது.

மாரங்கியரில் தென்பெண்ணை நதிக்கு தடுப்புச் சுவர்

* வினா எண். 797—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்கா யாரங்கியர் கிராமத்தில் தென்பெண்ணை நதிக்கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் உத்தேசம் உண்டா ?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தென் பெண்ணையின் வலது கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் ஏற்கெனவே கட்டப் பட்டுள்ளன. 1977-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் அவை பழுதடைந்தன. அவற்றை சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நீலகிரியில் மலர்க்காட்சி, பழக்காட்சி.

* வினா எண். 798—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊட்டியில் நடைபெறும் மலர்க்காட்சி, குன்னூரில் நடைபெறும் பழக்காட்சி ஆகிய நிகழ்ச்சிகளை அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவரவர்களே, ஊட்டி யில் நடைபெறுகின்ற மலர்க் காட்சி, குன்னூரில் நடைபெறும் பழக்காட்சி ஆகிய இரண்டையும் அரசின் சார்பிலே எடுத்து நடத்துகின்ற உத்தேசம் இந்த ஆண்டு முதல்தான் அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இதற்கு முன்பு யார் அதனை நடத்தினார்கள்? அவ்வாறு தனியார்கள் நடத்துகின்ற போது தவறுகள் நடந்திருக்கின்றது என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர் களே, கடந்த 1978-ம் ஆண்டு வரையிலும் நீலகிரி விவசாய தோட்டக்கலை சங்கத்தினர் ஆண்டுதோறும் அந்த மலர்க்காட் சியையும், பழக்காட்சியையும் நடத்தி வந்தனர். ஒவ்வொரு ஆண்டிலும் ஏறத்தாழ மலர்க்காட்சி நடத்தியதன் மூலமாக 40 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக இலாபம் கிடைத்துள்ளது. பழக் காட்சி நடத்தியதன் மூலமாக ஏறத்தாழ 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரம் ரூபாய் வரையிலும் அவர்களுக்கு இலாபம் கிடைத்திருக் கிறது. இந்த ஆண்டிலே இருந்து அவற்றை அரசே எடுத்துக் கொள்ளலாமா என்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கடந்த ஆண்டு 1978லே மலர்க்காட்சியைத் திறந்து வைத்த நேரத்தில், மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கு வருகின்ற வருமானம் தனிப்பட்ட ஒரு ஸ்தாபனத்திற்குச் செல் கிறதே, அந்தப் பணத்தை அரசாங்கத்திற்கு வருகின்ற சூழ் நிலையை உருவாக்கக் கூடாதா என்ற கருத்தினைத் தெரிவித்